# திருக்குறள் காமத்துப்பால் வழியாக உடல்வேதியியல் உளவியல் மாற்றங்கள்

முனைவர் ச.குருஞானாம்பிகா

உதவிப்பேராசிரியர் (SG), தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்
மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர் - 43

guruambika@gmail.com.

5

**ஆய்வுச்சுருக்கம்**

நமது இலக்கியங்களில் அறத்தையும், உணர்வையும், அழகியலையும் நாம் ஆய்வுக்குட்படுத்திப் பார்ப்பதுப் போல, அறிவியலை, தொழில்நுட்பத்தைப் பெரிதும் ஆய்வுக்கு உட்படுத்துவதில்லை. குறிப்பாக மருத்துவ அறிவியல். அதனால் தான் 2000ம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய இலக்கியங்களைப் பார்க்கும் போது நாம் வாழ்ந்த வாழ்க்கைக்கும் இன்றைய நமது வாழ்க்கைக்கு ஏராளமான வேறுபாடுகளைக் காண முடிகிறது. நம் வாழ்வில் நமது பழக்கவழக்கங்கள், அதை அடியொற்றிய வாழ்க்கை எனப் புறம் மாறி இருக்கிறது. ஆனால் அகம் மாறவில்லை. அதற்கான காரணங்களை உடற்கூற்று அறிவியலின் அடிப்படையில் கண்டறிந்து, காமத்துப்பாலோடுக் கட்டுரைப் பொருளானது பொருத்திப் பார்த்து புதிய முடிவை வெளிக்கொணர்வதாக இந்த ஆய்வு அமைகின்றது.

**திறவுச்சொற்கள்**

காமத்துப்பால், பதின்மப்பருவம், மூளைப்பகுதி, சுரப்பிகள், உடல் உணர்வுகள், வெளிப்பாடுகள், மனதில் தோன்றும் எண்ணங்கள், மருத்துவ அறிவியல்

**முன்னுரை**

காலத்தால் அறுதியிட்டுக் கூற முடியாதத் தொன்மைப் பண்போடு மொழியுலகின் ஆளுமை செறிந்திருக்கிற சிறப்புத் தமிழ் மொழிக்குண்டு. பன்னெடுங்காலமாக இயற்கையையும், அறிவியலையும் உள்ளடக்கியதாகவே இதன் பாடுபொருள் பொருண்மை அமைந்திருக்கிறது .இன்றைய விஞ்ஞான வளர்ச்சியும,; ,தகவல் தொழில்நுட்பத்திறனும் வளர்ச்சி பெறுவதற்கு முன்னரே தமிழ்ச் சமூகத்திற்கு இவையனைத்தும் குறித்த நுட்பமும், புரிதலும்,,பயன்படுத்துகிற அறிவின் தெளிவும் வாய்க்கப் பெற்றிருந்ததை இலக்கியங்கள் சான்றுகளாக பகருகின்றன. அந்த வகையில் திருக்குறளின் காமத்துப்பால் ஆண் பெண்ணுக்கான உறவினை அழகியலோடு சேர்த்து நுட்பமாக எடுத்துரைத்திருக்கிறது .இன்றைய மருத்துவ உலகம் நம் உடலுக்குள் ஒவ்வொரு வயதிலும் நிகழ்கிற மாற்றங்களைக் கண்டறிந்து, அறிவியலாக வெளிப்படுத்தியிருக்கிறது. ஒரு ஆணுக்கும் ,பெண்ணுக்கும் பதின்மப்பருவம் (Teenage) தொடங்கி இளமைப்பருவம் முழுவதுமாக

அவர்கள் உடலிலும், மூளைப்பகுதியிலும் சுரப்பிகளின் செயல்களால் உண்டாகின்ற உடல் உணர்வின் வெளிப்பாடுகள் மற்றும் மனதில் தோன்றும் எண்ணங்கள் ஆகியவற்றை மருத்துவ அறிவியலின் வழியாகப் பொருத்திப் பார்ப்பதே கட்டுரை பொருளாக அமைகிறது.

**தமிழ் இலக்கியமும் அறிவியலும்**

தமிழ்ச்சமூகம் தொன்றுதொட்டு பின்பற்றிய மரபுகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் அனைத்திலும் பின்புலமாக அறிவியல் இயங்கியிருக்கிறது. அறிவியல் எனப்படுவது “சிந்தனைகளின் அறிவார்ந்த அலசல்”. (கவிதைகளில் அறிவியல,; நெல்லை சு. முத்து, பக். 6) என்று கூறப்படுகிறது. “அறிவைச் செயல்படுத்தினால் அது அறிவியலாகும்”. (அறிகவாரீர் அறிவியல் தமிழ,; டாக்டர.; மீனாட்சி சுந்தரம,; ப.1) என்றும் அறியப்படுகிறது. “இயற்கை பற்றிய உண்மைகளையும், முறைமைகளையும் ஒழுங்குப்படுத்தி ஆய்வது அறிவியல் ஆகும். ‘Scientia’ என்ற இலத்தின் சொல்லிலிருந்து ‘science’ என்ற சொல் பிறந்தது. அறிவியல் என்பது அறிவூட்டுவது. மனித குல வரையறைகளை மேம்படுத்துவது. வாழ்க்கையைச் செழுமையுறச் செய்வது மட்டும்தான் என்னும் கருத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டிய அளவுக்கு அறிவியல் வளர்ந்து வருகிறது”. (பிறதுறை தமிழியல், பேரா. காசிராஜன். இரா, முனைவர். கருணாகரன். மா, முனைவர் அழகிரிசாமி. வீரா, பக் 250) வள்ளுவம் தனக்குள் அறிவியலின் அனைத்துப் பகுதிகளையும் கொண்டிருக்கிறது. பிற்காலத்தில் உலகெங்கும் விஞ்ஞான வளர்ச்சியில் வெளிவந்த அறிவியல் உண்மைகள் அனைத்தையும் வள்ளுவர் முன்பே எடுத்துரைக்கிற விதம் வியக்கத்தக்கதேயாகும்.

நாளமில்லா சுரப்பிகள் (ஹார்மோன்கள்) வரையறை

உடல் உணர்வுகளின் இயக்கத்தில் நாளமில்லா சுரப்பிகள் பெரும்பங்கு வகிக்கின்றன.

“ஹார்மோன்கள் சில செல்கள் மற்றும் உறுப்புகளின் செயல்பாட்டைக் கட்டுப்படுத்தவும் கட்டுப்படுத்தவும் சிறப்பு சுரப்பிகளால் ஒருங்கிணைக்கப்பட்டு உற்பத்தி செய்யப்படும் இரசாயனங்கள் ஆகும். இந்த சிறப்பு சுரப்பிகள் நாளமில்லா சுரப்பிகள்" என்றவாறு வரையறை அமைகிறது.

Huxley in 1935 defined hormones as “information transferring molecules, the essential function of which is to transfer information from one set of cells to another, for the good of the cell population as a whole” (Endocrinology Hormones and Human Health, Prakash S Lohar. Pg.6).

**நாளமில்லா சுரப்பிகளின் பணி**

நாளமில்லா சுரப்பிகள் உடலின் தூதர்களாக செயல்படும் இரசாயனங்கள் ஆகும். இந்த இரசாயனங்கள் நாளமில்லா சுரப்பிகள் எனப்படும் சிறப்பு சுரப்பிகளால் சுரக்கப்படுகின்றன. இந்த நாளமில்லா சுரப்பிகள் உடல் முழுவதும் விநியோகிக்கப்படுகின்றன. இந்த தூதர்கள் பல உடலியல் செயல்பாடுகளையும் உளவியல் ஆரோக்கியத்தையும் கட்டுப்படுத்துகிறார்கள். உடலில் ஹோமியோஸ்டாசிஸை பராமரிப்பதிலும் அவை மிகவும் முக்கியமானவையாக அமைகின்றன..

கட்டுப்படுத்தும் பணியைச் செய்யும் நாளமில்லா சுரப்பிகள்

நாளமில்லா சுரப்பிகளின் முக்கிய பங்கு ஒரு தூதுவராக செயல்படுவதாகும். 'ஹைபோதாலமஸ்' என்பது முன்மூளையின் ஒரு பகுதியாகும், இதில் ஏராளமான நரம்புசெக்ரட்டரி செல்கள் உள்ளன. இந்த 'நியூரோசெக்ரட்டரி' செல்கள் 'நியூரோஹார்மோன்கள'; எனப்படும் சுரப்பியை சுரப்பதில் முக்கியத்துவம் பெற்றவையாகும். அவை பிட்யூட்டரி சுரப்பியின் முன்புற மடலைத் தூண்டி பல்வேறு சுரப்பிகளை உற்பத்தி செய்கின்றன.

சில நேரங்களில், நாளமில்லா சுரப்பிகள் ஒரு தூதரை விட ஒரு சீராக்கியை விட அதிகமாக செயல்படுகின்றன. சுரப்பிகளின் உற்பத்தியில் ஏற்படும் மாற்றங்கள் உடலில் சில மாற்றங்களுக்கு வழிவகுக்கும். இதனால், நாளமில்லா சுரப்பிகள் ஒரு கட்டுப்பாட்டாளராக உடலின் ஹோமியோஸ்டாசிஸை பராமரிக்கிறது. நாளமில்லா சுரப்பிகள் தங்கள் இலக்கை அடைந்தவுடன், அவற்றின் உற்பத்தி கட்டுப்படுத்தப்பட வேண்டும் . அத்துடன் இது பின்னூட்டக் கட்டுப்பாட்டு பொறிமுறை எனப்படும் ஒரு பொறிமுறையால் அடையப்படுகிறது. பின்னூட்ட வழிமுறை நேர்மறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ அமைகிறது.

**பதின்மப் பருவத்தில் நாளமில்லா சுரப்பிகளின் பணி**

மனிதர்கள் குழந்தைகளில் இருந்து பெரியவர்களாக வளரும்போது, அவர்கள் இளமைப் பருவத்தை கடந்து செல்கிறார்கள். இளமைப் பருவம் என்பது ஒரு நபரின் வாழ்க்கையில் பெரும் சமூக, சுற்றுச்சூழல் மற்றும் உயிரியல் மாற்றங்களின் காலமாகும். பருவமடைதல் ஆரம்பம், இது பெரும்பாலும் பதின்மவயதில் (Teenage) நிகழ்கிறது, இது மனித உடல் மற்றும் உணர்ச்சி வளர்ச்சியின் இயக்கத்தில் ஒரு முக்கியமான காலகட்டமாக இருக்கிறது. இந்த நேரத்தில் நிகழும் மிகவும் வெளிப்படையான உடல் மாற்றங்களுக்கு மேலதிகமாக, மூளையும் பல்வேறு மாற்றங்களைச் சந்திக்கிறது. இந்த மாற்றங்கள் சுரப்பிகள் (ஹார்மோன்கள்) எனப்படும் இரசாயனங்களால் இயக்கப்படுகின்றன. இவை நம் உடலை உயரமாக மாற்றவும், வடிவத்தை மாற்றவும், முடி வளரவும் உதவுகின்றன. சுரப்பிகள் உடலின் வெவ்வேறு பகுதிகளில் (எலும்புகள், தசைகள் அல்லது தோல் போன்றவை) செயல்பட்டாலும், பருவமடைவதற்கு பல முக்கியமான சுரப்பிகள் மூளையில் இருந்தே உருவாக்கப்படுகின்றன.

அன்பு, காதல் உணர்வைத் தூண்டும் சுரப்பிகள்:

ஆக்ஸிடோசின் (oxytocin)

ஆக்ஸிடோசின் எனப்படும் சுரப்பியானது காதல் சுரப்பியாகக் கருதப்படுகிறது. 'Cuddle Hormone' என்று கூறுவர். இது காதல் உணர்வு, உடல் தொடர்பு ஆகியவற்றை ஏற்படுத்துகிறது.

இக்காதல் உணர்வு வள்ளுவத்தில் புணர்ச்சி மகிழ்தல் என்னும் அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

"கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள" (தி.கு:1101)

என்ற குறளானது, ஒரு ஆணின் (oxytocin Hormone) ஆக்ஸிடோசின் சுரப்பியானது, ஒரு பெண்ணைப் பார்க்கும் போது, ஏற்படுத்தும் உணர்வை எடுத்துரைக்கிறது. அதனால்தான் கண்டும், கேட்டும், உண்டும், முகர்ந்தும், தொட்டும் அறிகின்ற ஐந்துவகைப் புலன் இன்பங்களும் தான் பார்த்தப் பெண்ணிடமே இருப்பதாக அந்த ஆண் கூறுகிறான்.

**டோபமைன் (Dopamine)**

டோபமைன் எனப்படும் சுரப்பியானது மகிழ்ச்சியின் சுரப்பியாகும். இது மகிழ்ச்சியான நிகழ்வுகளை, அன்பை வெளிப்படுத்துவதற்கு அடிப்படையாக இருக்கிறது. அன்பை வெளிப்படுத்துவதற்கும் காதலை உணர்த்துவதற்குமான பணியை இச்சுரப்பி செய்கிறது என்பதை,

“கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்

செம்பாகம் அன்று, பெரிது” (தி.கு: 1092)

காமத்துப்பாலின் ‘குறிப்பறிதல்’ அதிகாரக்குறள் எடுத்துரைக்கிறது. தான் விரும்பும் ஒரு பெண்ணைப் பார்க்கிற கள்ளத்தனமானப் பார்வையானது காமத்தில் சரிபாதியன்று, அதைவிடப் பெரும்பகுதி என்று சொல்லும் அறவிற்கு அப்பார்வையானது காதலனின் காதல் உணர்வைத் தூண்டுவதாகக் கூறப்பட்டிருக்கிறது.

**செரோடோனின் (serotonin)**

செரோடோனின் எனப்படும் சுரப்பியானது, மன அமைப்பிற்கான உணர்வுகளையும், காதல் உணர்வுகளையும் தூண்டக்கூடியது. மன அமைப்பிற்கான காதல் உணர்வுகள் அனைத்தையும் இச்சுரப்பியே தீர்மானிப்பதாக இருக்கிறது.

“வாழ்தல் உயிர்க்கு அன்னள் ஆயிழை: சாதல்

அதற்கு அன்னல் நீங்கும் இடத்து” (தி.கு: 1124)

உடன் இருக்கும் போது தான் காதலிக்கும் இப்பெண் உயிர்வாழ்வைத் தருபவளாகவும், பிரித்துவிட்டால் அந்தப் உயிருக்குச் சாவு நேரிட்டது போன்றும் அந்தப் பெண்ணால் உண்டான காதலும், காமமும் தன்னை ஆட்டிவைப்பதாகத் தலைவனால் கூறப்படுகிறது.

அதுமட்டுமின்றி தனக்குத் தோன்றும் காம உணர்வானது கட்டுப்பாட்டுக்குள் வைக்க இயலாது, தன்னையும் மீறுவதாக எண்ணி தலைவன் உரைப்பதாகக் கூறுகிறது ஒருகுறள்.

“காமக் கடும்புனல் உய்க்கும் நாணொடு

நல்லாண்மை என்னும் புணை” (தி.கு: 1134)

என்ற இக்குறளானது, தகாத செயலோ என்ற கூச்ச உணர்வு, பகைவரை நல்ல போர் முறையில் வீழ்த்தும் ஆண்மை ஆகிய தோணிகளைக் காமம் என்ற வேகமான வெள்ளமானது அடித்து இழுத்துச் சென்றுவிடுகிறது. முன்னறிவிப்பில்லாத வேகம் உடைய காட்டாற்று வெள்ளம் போன்ற காதல் உணர்வும் ஏற்படுவதாக அறியப்படுகிற இவ்வுணர்விற்கான சுரப்பியானது செரோடோனின் ஆகும்.

**எண்டோர்பின்ஸ் (Endorphins)**

எண்டோர்பின்ஸ் எனப்படும் சுரப்பியானது உண்ணும் போதும், சிரிக்கும் போதும், காதலிக்கும் போதும் மகிழ்ச்சியான செயல்களை அனுபவிக்கும் போதும் சுரக்கின்றன. இவை மூளையில் உற்பத்தி செய்யப்படும். இயற்கையான போக்குவரத்து நீக்கிகள் ஆகும்.

வகைகள்:

1. பீட்டா – எண்டோர்பின்கள்
2. மியூ - எண்டோர்பின்கள்
3. டெல்டா - எண்டோர்பின்கள்

வலி நிவாரணம், மகிழ்ச்சி உணர்வு, அதிர்ச்சி தலைப்பு, உறக்கம் மற்றும் ஓய்வுக்கு இச்சுரப்பிகள் காரணமாக அமைகின்றன.

“உடம்பொடு உயிரிடை என்னமற்று அன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு” (தி.கு: 1122)

என்ற குறளானது, உயிருக்கும், உடலுக்கும் இடையேயுள்ள பிரிக்கமுடியாத உறவு எப்படியோ, அதே போல பிரிக்கமுடியாத உறவாக தான் காதலித்தப் பெண்ணையும் தன்னையும் தலைவன் குறிப்பிடுகின்றான்.

“பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்” (தி.கு: 1121)

என்ற குறளானது, தன் காதலியின் தூய பற்களுக்கிடையில் ஊறும் நீர், பாலிலே தேன் கலந்துவிட்டதைப் போலச் சுவை மிகுந்தது என்று தலைவன் கூறுவதாக அமைந்துள்ளது. இதுபோன்ற மகிழ்ச்சியான செயல்களை காதலர்களுக்கிடையே உருவாக்கும் சுரப்பியாக எண்டோர்பின்ஸ் அமைந்திருக்கிறது.

**பாலியல் சுரப்பிகளின் பணி (Sex Hormones)**

டெஸ்டோஸ்டிரோன் (Testosterone)
ஆண் பாலின பாலியல் சுரப்பி

ஆண் பாலியல் சுரப்பியாக இது அமைந்து பாலியல் தூண்டுதல்களை நிகழ்த்துகிறது.

“தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு” (தி.கு: 1103)

வைகுந்தமே வீடுபேற்றிற்கான வழி என சமயம் கூறுகிறது. தலைவனின் காதலோ, தன்னால் விரும்பப்படும் காதலியின் மென்மையான தோளிலேயே அப்பேரின்பம் கிடைப்பதாக எண்ணவைக்கிறது.

“உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள்.” (தி.கு: 1106)

என்ற குறளானது தலைவியைச் சேராமல் தனித்திருக்கும் போது உயிர் வாடுவதாகவும், தலைவியைச் சேர்ந்து, தொடும்போது மீண்டும் உயிர் துளிர்ப்பதாகவும், அதனால் தலைவியின் தோள்கள் அமுதத்தால் செய்யப்பட்டனவென்று தலைவனால் கூறப்படுகிறது.

“ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்

கூடியார் பெற்ற பயன்.” (தி.கு: 1109)

என்ற குறளானது, ஊடுதலும், ஊடுதலை உணர்ந்து அதனை விட்டு, பின் கூடுதலும் ஆகிய இத்தொடாச்;செயல்கள் காதலால் இணைகிற தலைவன், தலைவி ஆகிய இருவரும் வாழ்வில் பெறும் இன்பங்கள் என்று தலைவனை உணரவைக்கிறது.இப்பணியை ‘டெஸ்டோஸ்டிரோன்’ என்ற சுரப்பியே செய்கிறது.

**ஈஸ்ட்ரோஜன் (Estrogen)**

பெண் பாலின பாலியல் சுரப்பி

பெண் பாலியல் சுரப்பியாக ஈஸ்ட்ரோஜன் அமைந்திருக்கிறது. இது பெண்ணின் உடலில் பாலியல் சுரப்பியாகவும், மாதவிடாய் சுழற்சியை செயல்படுத்துவதாகவும் அமைந்திருக்கிறது. பெண் பாலின சுரப்பியான இது 7 முதல் 13 வயதிற்குள் பெண்ணுக்குள் ஏற்படுகிற பருவ மாற்றத்திற்கான பணிகளை செய்கிறது. உடல் உறுப்புகளில் பெண்ணுக்கு ஏற்படுகிற வளர்ச்சி மாற்றத்திற்கு இதுவே காரணமாக அமைகிறது.

தலைவனைப் பிரிந்திருக்கிற தலைவியை காமநோயானது சுடுவதைப் போல வாட்டுகிறது. நெருப்புக்கூட தொட்டால் தான் சுடும். ஆனால் தொடாத காரணத்தினால் சுடுகிற தன்மை காமத்திற்கு உண்டு என்கிறாள் தலைவி. இப்படி இவளைக் கூற வைக்கிற சுரபியாக ‘ஈஸ்ட்ரோஜன்’ இருக்கிறது.

“தொடிற்சுடின் அல்லது காமநோய் போல

விடிற்சுடல் ஆற்றுமோ தீ.” (தி.கு: 1159)

என்ற குறள் மேற்கண்ட கருத்திற்கு சான்று பகருவதாக அமைந்திருக்கிறது.

இதனை அடியொற்றிய குறள்களாக,

“காமக் கடல்மன்னும் உண்டே - அதுமட்டும்

ஏம்பா புணைமன்னும் இல்" (தி.கு: 1164)

என்ற குறளும்,

“கொடியார் கொடுமையின் தாம் கொடிய

நெடிய கழியும் இரா". (தி.கு: 1169)

என்ற குறளும் அமைந்திருக்கின்றன.

தலைவியின் உணர்வில் காமமானது கடலைப்போல் விரிந்து கிடக்கிறது. ஆனால் அதனைக் கடப்பதற்கானப் பாதுகாவலான தோணிகள் இல்லை. தலைவனைப் பிரி;ந்திருக்கும் நாட்களில் இரவு நேரம் கழிவதற்கு நெடுநேரம் ஆகிறது. அந்த வேளைகளில,; கொடுமை செய்வதில் கொடியவராகிய தலைவரைவிட இரவுகள் கொடுமையானவையாக வாட்டித் துன்புறுத்துவதாகத் தலைவியின் உணர்வு வெளிப்பட்டிருப்பதை அறியமுடிகிறது.

**உளவியல் மாற்றத்திற்கு சுரப்பிகளின் பணி**

மனித வாழ்க்கை முழுவதும் வயது கடக்க கடக்க உடலைப் போலவே, மனமும் பல்வேறு உளவியல் மாற்றங்களை நிகழ்த்துகிறது. குழந்தைப்பருவத்தில், இளமைப்பருவத்தில், நடுத்தரப்பருவத்தில், வயோதிக நிலையில் உடல் எப்படி படிப்படியாக வெவ்வேறு மாற்றங்களையும் புரிகிறதோ அவ்வாறே மனமும். மாற்றமடைகிறது.

பதின்மப்பருவமும், இளமைப்பருவமும் செயலாற்றுகிற வினைகள் பெரும்பான்மையும் உடல் உணர்வு சார்ந்ததாக இருப்பதற்குக் காரணம் சுரப்பிகளின் தூண்டுதலேயாகும். ஏதும் அறியாத குழந்தைப்பருவத்திலும், வயோதிகத்திலும் இதன் பணி முழுமையாக இருப்பதில்லை. அதனாலேயே ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து இன்று வரையும் பதின்மப்பருவத்து உணர்வுகள், அவை வெளிப்படும்விதம் அனைத்தும் காலமாற்றத்தாலும் வேறுபடுத்திப் பார்க்கவோ, மாறுபடுத்திக்கூறவோ இயலாத வகையில் ஒரே உணர்வுப் பொருளைக் கொண்டவையாகப் படைக்கப்படுகின்றன. இன்றைய இளைஞர்களும் இந்த டிஜிட்டல் உலகத்தில் சற்றும் குறைசொல்ல முடியாத தங்கள் உணர்வுகளை கவிதைகளாக, எழுத்தக்களில் பதிவு செய்கின்றனர். மனிதஉடல் தோன்றியதிலிருந்து இன்று அறிவியல் வளர்ச்சி, இந்த யுகத்தைத் தொழில்நுட்பயுகமாக மாற்றியிருந்தாலும் உடலும், இதன் இயக்கமும், உடலின் வழி இயங்குகிற உள்ளமும் ஒன்று என்பதையே வள்ளுவமும் வெளிப்படுத்தி இருக்கிறது.

**முடிவுரை**

தமிழ்ச்சமூகம் பின்பற்றிய வாழ்வியலின் அடிப்படையானது, இன்றைய அறிவியலறிவை எடுத்துரைப்பதாகவே இருந்திருக்கிறது. தனிப்பட்ட மனிதர்களின் பண்புகள், அன்றாடப்பழக்கங்கள், வாழ்வியல் நெறிகள் அனைத்துமே உடலுக்கும், வாழ்வுக்கும் உன்னதம் சேர்க்கும் வகையில் அமைந்திருக்கிறது. அறிவியலின் அனைத்து உட்பிரிவுகளையும் தமது பொருண்மையாக கொண்டிருக்கிற தமிழிலக்கியத்தின் நெடும்பரப்பில், உலகப் பொதுமறையாக போற்றப்படுகிற திருக்குறளும் அடங்கும். முப்பாலில் அறத்துப்பால், பொருட்பால் இன்றைய அறிவியல் தொழில்நுட்பத்தை கொண்டிருப்பது போலவே காமத்துப்பாலும் அழகியலையும்,உணர்வையும் மட்டுமே வெளிப்படுத்தாது உடற்கூற்று அறிவியலை, மூளையின் செயல் திறனை , அதன் வெளிப்பாட்டினை மையமிட்டே படைக்கப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துரைப்பதே கட்டுரைப் பொருளாக அமைந்திருக்கிறது.

**துணைநின்ற நூல்கள்**

1. காசிராஜன். இரா, பேரா, கருணாகரன். மா, முனைவர், அழகிரிசாமி. வீரா, முனைவர், . பிறதுறை தமிழியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அண்ணா சாலை, சென்னை – 600002.

2. மீனாட்சி சுந்தரம், டாக்டர், அறிகவாரீர் அறிவியல் தமிழ், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அண்ணா சாலை, சென்னை – 600002.

3. முத்து. சு, நெல்லை, கவிதைகளில் அறிவியல,; நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அண்ணா சாலை, சென்னை – 600002, மு.ப:2001.

4. Chatterjee. CC, Human Psychology, Volume - 2.

5. Johnsin, Leonard. R , Essential Medical Psychology.

6. Margaret Stainer, Mary Forsling, Psychological Processes.

7. Prakash S Lohar , Endocrinology Hormones and Human Health.